புதினம்
சுவையான செய்திக் கிழமை இதழ்...
வரதர் வெளியீடு
அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை
மலர் 1 | 14-1-62 | ஞாயிறு | இதழ் 31

## இந்த இதழில்—

- கேட்டீரா இவர் கதையை!
- ரஷ்யாவிலும் கள்ள மார்க்கெட்?
- 'காதல்னு எனக்குத் தெரியாது' — குமாரி 'சச்சு'
- காதல் முறிந்தால் துறவா? — (உங்கள் கருத்து)
- ஐந்து கவிதைகள்!

★ ★ ★ ★

கல்விக் கமிஷன் சிபார்சு:

# சிங்களம் மட்டும் கட்டாய பாடம்!

## தமிழ் உறுப்பினரின் தீவிர எதிர்ப்பு!

''சிங்களம் மொழி கட்டாய பாடமாக்கப் படவேண்டும் என்பதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். மாணவர் தங்கள் சொந்தத் தாய்மொழியை விட்டு, வேற்று மொழியைக் கட்டாயபாடமாகஏற்றுப் படிப்பதென்பதுமுடியாத காரியம். அதுவிரும்பத்தக்கதுமல்ல. ஐந்தாம்வகுப்பு வரையில் மாணவர்கள் தங்கள் தாய்மொழியிலன்றி, வேறு மொழியில் கல்வி பயில முடியாது. அதற்குப் பிறகும், மாணவர்களின் விருப்பத்தைப் பொறுத்தே அவர்கள் விரும்பும் மொழியைப் போதிக்கலாம்.

'சிங்களம் மட்டும்' சட்டம் அமுல்நடத்தப்பட்டுள்ளதை இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ்மக்கள் இன்னும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளவில்லை! மாறாக, எதிர்ப்பே காட்டி வருகின்றனர். இந்தவிஷயத்தில் கட்சிபேதம் பாராட்டாது தமிழ் மக்கள் 'சிங்களம் மட்டும்' சட்டத்தில் தங்களுக்குச் சாதகமான மாற்றம் ஏதுவும் ஏற்படக் கூடும் என்று, தமிழ்மக்கள் யாவரும் ஏகோபித்து, எதிர்நோக்கியிருக்கின்றனர்!'' — இவ்வாறு தேசிய கல்விக்கமிஷனின் தமிழ் அங்கத்தவர்களான திரு. சு. நடேசபிள்ளையும், திரு. ஹண்டி பேரின்பநாயகமும் கூறியிருக்கிறார்கள்.

'இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள், சிங்களத்தைக் கட்டாய பாடமாக ஏற்றுப் படித்தே ஆகவேண்டும்' என்று தேசிய கல்விக்கமிஷன்சிபாரிசு செய்துள்ளது!

இந்தச்சிபாரிசை எதிர்பதே திரு.சு, நடேசபிள்ளையும், திரு. ஹன்டி பேரின்பநாயகமும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.


யூ. என். பி. ஆட்சிசெய்த காலத்தில் இலங்கையின் கல்வி அமைச்சராகக், கடமையாற்றிய திரு. சு நடேசபிள்ளையும், திரு. ஹன்டி பேரின்பநாயகமும் தற்போது தேசிய கல்விக் கமிஷனின் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். இந்தச்சிபாரிசைஅவர்கள் ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் என்னவென்பதைத்தெரிவிக்கையில், 'அண்மைக்காலத்தில், எதிர்பாரதவிதமாகத் தோன்றிய 'அரசகரும மொழிக் கொள்கை' யின் சட்டபூர்வமான அம்சத்தைமட்டும்நோக்குவதாக இருந்தால்,நாட்டின் எதிர்கால நல்வாழ்வுபாழாகும் என்பதில் சந்தேகமில்லை! இந்த அரசகரும மொழிக் கொள்கையால், நம் நாட்டில் மனக்கசப்பு ஏற்கெனவே ஏற்பட்டுள்ளது. இதைமேலும் வலுவடையச்செய்யும் விதத்தில் தேசிய கல்விக்கமிஷனின் சிபாரிசுகள்எதுவும் அமைக்கப்படக் கூடாது.

சிறுவயதில் மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பது என்பது முடியாத காரியம். மாணவர்கள் சிறுவயதிலேயே தமிழ், சிங்களம் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பயில வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கல்விக் கொள்கைக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்பொழுது, கல்விக்

## சிங்கள அங்கத்தவர்கள் சிலரும் ஆதரிக்கவில்லை!

இது அவர்களின் அறிவு வளர்ச்சியைப் பாதிப்பதுடன், உள ஒருமைப்பாட்டையும் பாழ்படுத்தும் என்பது உறுதி! எனவே கட்டாய மொழியாகச் சிங்களத்தைமாணவரிடம் திணிப்பதன்மூலம் குறிப்பாகத் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் கமிஷனின் இந்த சிபாரிசு அவ்வளவு நல்லதாகத் தோன்றவில்லை!" என்று திரு சு. நடேசனும், திரு. ஹண்டி பேரின்பநாயகமும் வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

தேசியகல்விக்கமிஷனின் தலைவரான பேராசிரியர் ஜே. ஈ. ஜயசூரியாவும் மற்றும் கல்விக்கமிஷனின் இதர அங்கத்தவர்களான டாக்டர் ஏ. டபிள்யூ. எம். ஜோக்கிம், திரு ஸீ. ஈ. ஸ்மித்ஆராச்சி, திருமதி ஏ. எப். எஸ். பெரேரா, திரு. ஆர். ஸீ. எல். அட்டியகலை ஆகியோரும் ''சிங்களத்தை எல்லோரும் படிப்பதற்கான வசதியை மட்டும் செய்து கொடுத்தால் போதும் யார்மீதும்எந்தமொழியையும் வற்புறுத்தித் திணிக்கக் கூடாது'' என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்!



# கேட்டீரா இவர் கதையை!

"அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த போதும் ஒரு மாதிரி நெளிந்துவளைந்து, 'திரைமறைவில்' செய்திகளை எழுதினேன். இப்போது வேலைநிறுத்தம் சம்பந்தமான எந்தச் செய்தியும் தமது அனுமதியின்றி வெளியிடப்படக் கூடாதென்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இந்தவாரம் 'திரை மறைவில்' எழுதுவதானால் வேலைநிறுத்தங்கள் பற்றித்தான் எழுதவேண்டும். அதை விட்டு விட்டு சும்மா 'வழ வழா' என்று எழுதப்பிடிக்கவேயில்லை!"-என்று "அம்பலத் துறைவோன்" ஒரு குறிப்பை மட்டும் இவ்வாரம் அனுப்பியுள்ளார். அவருக்காக ஒதுக்கியிருந்த இந்த இடத்தை 'சங்கிலியன்' பிடித்துக்கொண்டு சுவையான சில குறிப்புகளைத் தந்திருக்கிறார். படித்துப்பாருங்கள்—

**ஈழத் தமிழ்ப் பேரப்பிள்ளைகளே, கேளுங்கள்!**

'சிச், சீ!... இதுவும் ஒரு உத்தியோகமா? இந்த எழுத்தாளன் உத்தியோகத்தையே உதறித்தள்ளி விட்டு, பேசாமல் 'அக்கடா' என்று அரசியலில் குதித்து ஆனந்தமாகப் பொழுது போக்கலாமே!' என்று நான் எண்ணினேன். 'ஆனந்தமாவது? அரசியலில் எங்கேஇருக்கிறது ஆனந்தம்?' என்று திருப்பிக்கேட்டது என் உள் மனம். இதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

ஒரு காலத்தில் அரசியல் உலகில் வீர நடைபோட்ட அடங்காத் தமிழரும், மாஜி வவுனியா பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஸி. சுந்தரலிங்கம் அவர்கள், "வேண்டாம் இந்த அரசியல் வாழ்வு" என்று அரசியல் அஞ்ஞாத வாசம் செய்கிறார் அல்லவா? இப்பொழுது, எழுதுவதில் அவர் இன்பம் காணுகிறாராம்! தான் பிறந்த காலத்திலிருந்து, இன்று வரை தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அத்தனையையும் ஒன்று திரட்டி, 'ஈழத் தமிழ்ப் பேரப்பிள்ளைகளே, கேளுங்கள்!' என்ற தலையங்கத்தில் ஒரு தமிழ்ப்பத்திரிகையில் தொடராகஎழுதப்போகிறாரும். ஆனால் இதில் இன்னும் ஒரு 'விசேஷம்' என்னவென்றால், அவர் ஆங்கிலத்தில் எழுதிய அந்தக் கட்டுரையை, வேறு ஒருவர் தமிழில் மொழி பெயர்க்க வேண்டியிருக்கிறதாம்! 'ஏன் அவரே தமிழில் எழுதினாலென்ன? அவருக்குத்தமிழில் எழுதத்தெரியாதா?' என்று ஈழத்தமிழ்ப் பேரப் பிள்ளைகள் கட்டாயம் கேட்கத்தானே செய்வார்கள்?

**பாதாள மண்டலத்துக்கு அனுப்புங்கள்!**

அவர்கள் அப்படிக் கேட்பதிலும் நியாயம் இல்லாமலில்லை. நம் தமிழ் அரசியல் அறிஞர்களில் பலர் 'தமிழ், தமிழ்' என்று உயிரை விடுகிறார்கள். ஆனால் அவர்கள் வாயால் 'தமிழ்' என்று எப்பொழுதாவது சுத்தமான தமிழில் பேசியிருக்கிறார்களா? 'டமில்' (Tamil) என்று ஆங்கிலத்தில்தானே கத்துகிறார்கள்?

கடந்த பொதுத் தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்குபற்றித் தமக்கு வோட்டளிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டிக்கொண்ட தமிழரசுக் கட்சியின் முக்கிய 'தூண்'களுள் ஒருவர் "மக்களே நீங்கள் என்னையே தெரிவு செய்து, பாதாள மண்டலத்துக்கு அனுப்புங்கள்..." என்றுபேசியது யாழ்ப்பாணத்தமிழ்மக்கள் கண்கூடாகக்கண்டு, காதுகுளிரக் கேட்ட உண்மை தானே?

பாவம், அந்தத் தமிழ்ப் பெரு மகனுக்குப் 'பாராளுமன்றம்' என்ற வார்த்தைகூட வாய்க்குள் நுளையவில்லை! அவரைப் பொதுமக்கள் பாதாளமண்டலத்துக்கு அனுப்பாவிட்டாலும், இன்று அவர் பாராளுமன்றத்தில் இருக்கத்தான் செய்கிறார்!

**நாடற்ற தமிழ் மாணவர்கள்!**

இந்தமாதிரி நம் தமிழறிஞர்கள் 'டமிலில்' பேசுவதற்கு முக்கிய காரணம், ஒருகாலத்தில் அவர்களுக்கு இருந்த ஆங்கில மோகம்தான்: ஆனால் இன்று நிலை முற்றிலும் மாறி விட்டது. சுய மொழியில் கல்வி கற்பதற்கான சூழ்நிலைகள் உருவாகியிருக்கும் இந்த நேரத்தில், பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியைத் தமிழிலேயே போதிக்கவேண்டியது தலையாய கடன். ஆனால் இன்று, பல லட்சக்கணக்கான தமிழ்க் குழந்தைகளுக்குப் பாடசாலைகளில் இடமளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மறுக்கிறதே? காரணம், அவர்கள் நாடற்ற பிரஜைகளின் குழந்தைகளாம்!

'பயிற்சி' முடிந்த பின்பும் பதவி கிடைக்காத

'தமிழ் வாத்தி' க்கு—

## பொங்கல் ஏது?

பயிற்சியெனும் இருவருடச் சிறையுந்தண்டப்
    பணமாயீ ராயிரமும் முழுக்குப்போட்டு,
'வெயிற்றிங்லிஸ்ட்' பூர்த்திசெய்து பெருமையோடு
    வெளியேறி 'வேக்கன்சீஸ்' தினமும்தேடி,
'அயிற்றிங்கும்' இடமின்றி இலவுகாத்த
    அருங்கிள்ளை நிலைபோ லேமாந்துநாளும்,
முயற்சியின்றிப் பட்டகடன் வட்டியேற
    முழிக்கின்ற தமிழ்வாத்திக் கேதுபொங்கல்?

தமிழினிமை மொழியினிமை சங்கம்கூடி (ச்)
    சான்றோர்கள் வளர்த்ததமிழ் வானோர்போற்
                                        [றும்,
அமிழ்தினும் நல் லினியதமிழ் அன்னையூட்டி,
    அன்போடு வளர்த்ததமிழ் என்று கூறும்,
தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசானாக (த்)
    தகைமைபெற ஈராண்டுப் பயிற்சிபெற்றும்,
இமியளவும் மதிப்பில்லை; எஸ். எஸ். சிக்கே!
    இடமுண்டு; தமிழ்வாத்திக் கேதுபொங்கல்?

கையிருந்த காசையெல்லாம் கரைத்துக்கொட்டி (க்)
    கருத்துடனே பயிற்சிதனை முடித்துட்டு,
மெய்வருந்த உளம்நலிய வேலைதேடி,
    வீண்பொழுதாய் மூன்றாண்டு அவமேபோக்கி,
இன்றுவரும் நாளைவரும் நல்லசேதி;
    என ஏங்கித் துடிக்கின்ற இளைஞர்வாழ்வில்
தைபிறந்தும் வழிபிறக்க வில்லையென்றால்,
    தமிழ்வாத்திக் கேதின்பம்? பொங்கல் ஏது?

— அருளாளன்



உங்கள் அபிமானத்துக்குரிய
'மில்க்வைற் சோப்'
புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்
நவீன தயாரிப்பாக
உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!

'கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் கல்விச்செல்வம்' என்றுசொல்வார்கள். (அரசாங்கம் சொல்வதைப்போல்) 'நாடற்ற' தமிழ்ப் பிள்ளைகள், பள்ளிக்கூடங்களில் படிக்கும் போது, இலங்கைக் குழந்தைகள் படிக்கும் பங்கையும் சேர்த்துக் கடித்துத் தின்று, ஜீரணம் செய்துவிடவா போகிறார்கள்? பிறகு ஏன் இந்த அப்பாவிக் குழந்தைகளுக்குக் கல்வி பெறும் வசதியளிக்க இந்த அரசாங்கம் மறுக்க வேண்டும்?

இது சம்பந்தமாக மலைநாட்டுத் தமிழர்களின் தலைவர்களும், தமிழரசு எம். பி. களும், மற்றும் தமிழ் அறிஞர்களும், தலைவர்களும் கொழும்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் வீட்டில் சந்தித்துப்பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். அதில், மலைநாட்டுத் தமிழ் மாணவர்களின் கல்விப் 'பிரச்சினை' சம்பந்தமாக, அரசாங்கத்தினருடன் பேசுவதற்கான ஒரு திட்டமும் திட்டப்பட்டுள்ளதாம்!

## உங்கள் காலபலன்

**14-1-62 மு. 20-1-62 வ.**

**மேடம்:** பிதாவழி பந்துக்களால் விசேஷ நன்மையுண்டு. கீர்த்தியும், தொழிலில் பலவித முன்னேற்றங்களும் காணப்படுகின்றன. ஆனால் குடும்பச்சச்சரவுகள் ஏற்பட இடமுண்டு.

**இடபம்:** தேகநிலை திருப்திகரமாக இருக்காது. உறவினர்களுடனும், நண்பர்களுடனும் விரோதங்கள் காணப்படுகின்றன. புதிய முயற்சிகள் சில தடைப்படலாம் ஆனால் பொருள்விருத்தி உண்டு.

**மிதுனம்:** குடும்பத்தில் சச்சரவுகள் காணப்படுகின்றன. ஆனால் புதன்கிழமையின் பின் குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனால் தேகசுகம் நன்றாக இராது. தொழில்கள் முதலில் தடைப்பட்டுப் பின்பு சித்தியாகும்.

**கடகம்:** தேகசுகமும், குடும்பச் சூழ்நிலையும் திருப்திகரமாக இருக்காது. புதிய தொழில்களால்எதிர்பார்த்திருக்கும் வருவாய் கிட்டாது. எதிர்ப்புகள் சிறிது ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளித்துக் கொண்டு முன்னேறமுடியும்.

**சிங்கம்:** புதிய தொழில்களில் வெற்றியுண்டு ஆனால் பிரயாசம் அதிகமாக இருக்கும். வருவாயும் போதியது கிட்டும். குடும்பச் சங்கடங்கள் சிறிது ஏற்படும்.

**கன்னி:** மனதில் அமைதி நிலவாது. தொழில் ஸ்தானத்தில் சங்கடங்கள் ஏற்பட இடமுண்டு. குடும்ப சச்சரவுகளும் உண்டாகும். வாரத்தில் முதலிரண்டு நாட்களையும் அவதானமாகக் கழிக்கவும்.

**துலாம்:** இளைய சகோதரரால் அதிக நன்மையுண்டு பொருள்விருத்தியாகும். ஆனால் தொழில் ஸ்தானங்களிற் சிறு சங்கடங்கள் ஏற்படலாம். திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் வாரங்களை அவதானமாகக் கழிக்கவும். உங்கள் மாதாவின் தேகநிலை பாதிக்கலாம்.

**விருச்சிகம்:** வாரமுற்பகுதியில் தொழில் முன்னேற்றம் காணப்படுகிறது. கமத்தொழிலாலும் லாபம் கிட்டும். ஆனால் மனதில் அமைதி நிலவாது. வியாழன் வெள்ளி வாரங்களையும் சனி காலையையும் அவதானமாகக் கழிக்கவும்.

**தநுசு:** பொருளைப் பொறுத்த வரையில் முன்னேற்றமுண்டு. பழைய முதலீடுகளால் போதிய வருவாய் கிட்டும். ஆனால் வாக்குக் கலகங்கள் ஏற்படும். கண்ணில் நோய்களும் உண்டாகலாம். சனி பிற்பகலை அவதானமாகக் கழிக்கவும்.

**மகரம்:** உங்கள் சொந்த விஷயங்களில் உள்ள சிக்கல்களைச் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும் தேகசுகவீனமும் குடும்பச் சச்சரவுகளும் காணப்படுகின்றன. சில நண்பர்கள் உங்களுக்குத் துரோகம் செய்யலாம்

**கும்பம்:** செலவினங்கள் அதிகமாகும். எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேறுவது கஷ்டமாக இருக்கும். நண்பர்களுடன் சிறு சச்சரவுகள் காணப்படுகின்றன. ஆனால் முன் முதலீடு செய்தவற்றால் பொருள் லாபம் கிட்டும்.

**மீனம்:** மறுபடியும் இது ஒரு நல்ல வாரம். கருமங்களில் இலகுவாக வெற்றிகிட்டும் பூமியால் லாபமுண்டு. ஆனால் தேக சுகம் சிறிதுபாதிக்கப்படும்.

—'ரவி' சோதிடர்

## "வாராய் என்தோழி வாராயோ..." என்று, வாலைக்குமரியிடம் வம்பு செய்தவர்

# 'வாங்கி முடிந்த' வரலாறு!

கடந்த வாரம் ஒருநாள் இரவு, கொழும்பு நகரிலுள்ள படமாளிகை ஒன்றில் படக்காட்சி முடிந்து ஜனங்கள் 'புற்றீசல்' போல் தியேட்டரிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள், அந்தக் கூட்டத்தில் ஒரு இளம் பெண்ணும் படம் பார்த்துவிட்டுத் தன் (வயது சென்ற) தந்தையுடன் தெருவில் போய்கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் கறுப்புத்தான். என்றாலும், கவர்ச்சிகரமான முகத்தோற்றமுடையவள். நீல நிறச் சேலையும், வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தாள். அவள் மூக்கில் மூக்குத்தி மின்னிக்கொண்டிருந்தது.

திடீரென்று 'வீல்'என்று கத்திவிட்டாள் அவள். அதைத்தொடர்ந்து கூட்டத்தின் மத்தியில் பரபரப்புஏற்பட்டது. ஒரு வாலிபன்-வெள்ளை நீட்டக்கால் சட்டையும், வெள்ளை ஷேட்டும் அணிந்திருந்தான். அந்த இளம் பெண்ணின் வலது கையைப்பிடித்துக் கொண்டு, "வாராய் என் தோழி வாராயோ மணப் பந்தல்காணவாராயோ..." என்று பாட ஆரம்பித்து விட்டான்! நல்ல குடிபோதையில் காணப்பட்ட அந்த இளைஞன், நிற்கக் கூட முடியாமல் தள்ளாடினான்!

இந்தக் காட்சியைக் கண்ட அந்தப் பெண்ணின் தந்தைக்கு எப்படியிருந்திருக்கும்? தன் கையில் வைத்திருந்த குடையை மாற்றிப் பிடித்துக்கொண்டு, அந்தவாலிபனை நையப் புடைத்தார். இதற்கிடையில், கூட்டத்தில் இருந்த சிலரும் அந்தப்பெரியவருடன் சேர்ந்து கொண்டு, தங்கள் 'கைவரிசை' யைக் காட்டினர்! இவர்களில் சிலர் விட்ட 'டப்பாங்குத்து' க்களைத் தாங்கமாட்டாமல், அந்த இளைஞன் 'பொத்'தென்று கீழே விழுந்து விட்டான். இதற்கிடையில் எங்கிருந்தோ ஓடிவந்த அவனது நண்பர்கள் சிலர், (அவர்களும் குடித்திருந்தனர்!) அவனைத்தூக்கி நிறுத்தி, அந்தப் பெண்ணின் தந்தையான கிழவரையும் 'தாஜா'ப்பண்ணி, ஒருவிதமாகச் சமாதானம் செய்துவிட்டு, எதிரே வந்து கொண்டிருந்த ஒரு டாக்ஸியை நிறுத்தி அதில் தங்கள் நண்பனை ஏற்றிக் கொண்டு போய்விட்டனர்.

அவர்கள் டாக்ஸியில் ஏறியதும், கூட்டத்தினர் 'ஊய்' என்று கூச்சலிட்டு, அந்த இளைஞனைக் கேலி செய்தனர்!

(கொழும்பு நிருபர்)

## அமெரிக்கா அனுப்பிய வானவெளி வானரம்!

'ஏனோஸ்' என்ற ஒரு வகை வால் இல்லாக்குரங்கு ஒன்றை ரொக்கெட்டில் வைத்து, பூமியைச் சுற்றிவரும்படி அமெரிக்கா அனுப்பியது! ரொக்கெட்டில் பொருத்தப்பட்டிருந்த 'மின்னொளிக் கூடு' ஒன்றுக்குள் இந்தக் குரங்கை வைத்து அனுப்பினார்கள்,

ஐந்தரைவயதும், மூன்று அடி-இரண்டு அங்குல உயரமும், முப்பத்தேழு றாத்தல் எடையுமுள்ள இந்தக் குரங்கு, மிகவும் புத்திசாலிக்குரங்காம்!

மின்னொளிக் கூட்டினுள் வைக்கப்பட்டிருந்த கருவிகளைத் தானாகவே இயக்கும் இந்தக்குரங்கு, தண்ணீரையும் வாழைப்பழங்களைக்கொண்டுதயாரிக்கப் பட்ட மாத்திரைகளையுமே உண்ணும். எந்தக்கருவிகளை எந்தச் சந்தர்ப்பங்களில் இயக்க வேண்டும் என்பதை, வண்ண ஒளிகளின் மூலம் இந்தக் குரங்குக்குப் பயிற்சியளித்தார்கள்.

சுமார் நாலரைமணி நேரத்தில் இந்தக் குரங்கு 79,000 மைல்களைச் சுற்றிவந்தது இந்த வாலில்லாக்குரங்கு இரண்டு முறை பூமியை வலம் வந்த பின்னர், மிகவும் பத்திரமாகக் கீழே இறங்கியதாம்!

## சோவியத்ரஷ்யாவிலும் கள்ள மார்க்கெட்?

அண்மையில் ரஷ்யாவில் முகச் சவரம் செய்யும் பிளேடுகளுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருந்ததாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியானது வாசகர்கள் அறிந்ததே! அப்பொழுது அங்கே கள்ளமார்க்கட்டில் ஒரு பிளேடு ஐந்து ரூபாவீதம் விற்கப்பட்டதாம்!

இயந்திர சாதனக் கண்டுபிடிப்புக்களில் துரிதவேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் ரஷ்யாவிற்கு எதிராக, அமெரிக்கப் பத்திரிகைகள் அவிழ்த்துவிட்ட 'புளுகு மூட்டை' கள் அல்ல; சோவியத் ரஷ்யாவிலிருந்து வெளிவரும் 'ஸ்வெஸ்தியா' என்ற பத்திரிகையில் கடந்த டிசம்பர் மாதம் 4-ந் திகதியன்று வெளியான 'உண்மைச் செய்தி'தான் இது!

ரஷ்யா முழுவதிலும் பிளேடுகளுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும், சைபீரியாவில்தான் இதற்கு அதிகப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும் செய்தியை வெளியிட்டிருந்த இந்தப் பத்திரிகை, "1962-ம் ஆண்டுக்கு முன்னர் பிளேடுகள் இறக்குமதி செய்யக்கூடாது என்ற காரணத்தால், இவ்வாண்டு கிறிஸ்மஸ் பண்டிகையின் போது பல குடும்பத்தின் தலைவர்கள், தாடி மீசையுடன் 'கிறிஸ்மஸ் தாத்தா'க்களாகக் காட்சியளிப்பார்கள்!" என்றும் கூறியது!

## பொங்குது!

அடுத்து அடுத்து அறிக்கை வந்து
அலறிக் குளறிப் பொங்குது
அதுக்கும் இதுக்கும் வரிபெருக
அனைவர் மனமும் பொங்குது!

அலை அலையாய் விலை உயர
ஆத்திரம்தான் பொங்குது
அணி அணியாய் வேலை இல்லார்
ஆள்படையும் பொங்குது!

அங்கு மிங்கும் லஞ்ச மென்ற
கஞ்சல் தனமும் பொங்குது
ஆட்சியாளர் நெஞ்சினுள்ளே
அச்சம் வந்து பொங்குது!

கண்ட கண்ட இடங்களெல்லாம்
*கசிப்புப் பானம் பொங்குது
காலில் போடும் செருப்புக்கூட
கட்சிச் சண்டை துவங்குது!

தகுதி இல்லார் தன்னை எண்ணித்
தலைமைப் பீடம் ஏங்குது
தகுதி உள்ளார் தம்மைக் கண்டு
தறுதலைகள் பொங்குது!

முட்டுக் கொடுத்த கட்சியெல்லாம்
மூலைதோறும் ஒதுங்குது
துட்டுக் குதவாச் செய்கையெல்லாம்
வெட்ட வெளியாய் விளங்குது!

கட்டுக் கட்டாய் நோட்டுமட்டும்
கணக்கில்லாது பெருகுது
பொட்டுக் கட்டு வெளிச்சிப் போச்சி
பொது சனமும் பொங்குது!

காக்கைக் கூட்டம் மயிலைப்போலக்
கருதி வேடம் போடுது
நாக்கில் மூளைத் தொடர்பு இல்லார்
நாசச்செயல்கள் பொங்குது!

பணம் படைத்த வீட்டிலெல்லாம்
பானை நிதமும் பொங்குது
பாடுபடுவோர் அடுப்பிலெல்லாம்
படுத்துப் பூனை தூங்குது!

குடிக்கக் கூழுமில்லை என்று
குடலும் குமுறிப் பொங்குது
கொண்டை பூவும் வேண்டு மென்று
குளறிக் குளறிப் பொங்குது!

அடுத்தவீட்டான் உயர்வு கண்டு
அகத்தில் பொறுமை பொங்குது
கொடுத்த பணத்தைக் கேட்கப்போனால்
கோபம் வந்து பொங்குது!

எடுத் தெடுத்துச் சொல்லயிலே
எந்தன் மனமும் பொங்குது
எழுத்தில் வடித்துச் சொல்லவந்தால்
எழுதுகோலும் பொங்குது!

— "ஆரையூர் அமரன்"

[*கள்ளச் சாராயம்]

'கரேல் செஸ்மன் கதை' 'ரமணன்'

# "மரண தண்டனை ஒழிய வேண்டும்!"

## கரேல் செஸ்மனின் கடைசி வேண்டுகோள்!

கலிபோர்ணிய கவர்ணர், செஸ்மனின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தார்!

கவர்ணர் உத்தரவிட்ட தன்பேரில், வழக்கு மீண்டும் கலிபோர்ணிய நீதிமன்றத்தில் ஆரம்பமானது. இம்முறை செஸ்மனின் வழக்கறிஞர் யார் தெரியுமா? சாட்சாத் கரேல் செஸ்மனே தான்!

இம்முறை அவன் தனக்காகவாதாடுவதற்கென்று ஒரு வழக்கறிஞரை நியமித்துக் கொள்ளவில்லை. தனக்காகத்தானே வாதாடினான், சிறையிலிருந்த பொழுது அவன் படித்த சட்டப்புத்தகங்கள் இந்த விஷத்தில் அவனுக்குப் பெரும் உதவிசெய்தன. மீண்டும் வழக்கு நடக்கும் பொழுது பிரசன்னமாகியிருந்த நீதிபதிகள், செஸ்மனுக்குச் சட்டத்தைப்பற்றிய அறிவு வளர்ச்சியைக் கண்டு பிரமித்துப் போய் விட்டார்களாம்!

செஸ்மன் தான் குற்றவாளி அல்லவென்றுவாதாடினான். முடிவில் தீர்ப்பளிக்க வேண்டியதுதான் பாக்கி, அதுவும் ஒரே ஒரு மனிதரில்தான் தங்கியிருந்தது. அவர் ஒரு சுருக்கெழுத்து நிபுணர்!

லோஸ் எஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் கடமையாற்றிய அந்தச்சுருக்கெழுத்து நிபுணர், எதிர்பாராத விதமாகத் திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டார்! இரண்டாவது முறை வழக்கு நடக்கும் பொழுது, காலஞ்சென்ற சுருக்கெழுத்தாளர் எழுதியவற்றைவேறு ஒரு நிபுணர் விபரித்து எழுதினார். இதைச் செஸ்மன் ஆட்சேபித்தான். ஒரு சுருக்கெழுத்தாளர் எழுதியதை வேறு ஒரு சுருக்கெழுத்தாளர் கடைசிவரை சரியாகமொழிபெயர்க்கமுடியாது என்று வாதாடினான். 'அந்த மொழிபெயர்ப்பு முற்றிலும் முழுப்பிழை!' என்றும் அவன் கூறத்தயங்கவில்லை. வழக்குவிசாரணை செய்த நீதிபதிகளில ஐவரில்மூவர் இந்தக்கூற்றை முதலில் ஆதரித்தாலும், பிறகு தங்கள் 'கொள்கை'யை மாற்றிக்கொண்டார்கள்! முடிவில், செஸ்மனுக்கு மீண்டும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. செஸ்மன் தளர்ந்து விடவில்லை. மீண்டும் நீதிஸ்தலத்தின் தீர்ப்புக்கு மாறாகக் கலிபோர்ணிய கவர்ணரிடம் புகார்மனுசமர்ப்பித்தான்.

கவர்ணர் எட்மண்ட் பிரவுன் ஒரு கொள்கைவாதி! தூக்குத் தண்டனையை ஆதரிப்பவரல்லர். தனது கொள்கையின் காரணத்தினால்தானோ, அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலோ செஸ்மனின் வேண்டுகோளுக் கெல்லாம் தலையசைத்துக் கொண்டேயிருந்தார்!

காலம் காற்றெனப்பறந்தது! எப்படியோ பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டன 1960-ம் ஆண்டும் வந்தது. இப்பொழுது கரேல்செஸ்மன்' என்ற பெயரை அறியாதவர்கள் இருக்கவே முடியாது!

செஸ்மன், உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தனக்கு அனுதாபத்தைத் தேடிக்கொண்டான், அதற்குக் காரணம், அவன் எழுதிய சிறந்தநூல்கள் மட்டுமல்ல; அவனுக்கு ஏழு முறை மரண தண்டனை திரும்பத் திரும்ப ஒத்தி வைக்கப் பட்டதும் ஒரு முக்கிய காரணம்! உலகிலேயே முதன் முதலாக செஸ்மனுக்குத்தான் ஏழு முறை மரதண்டனை ஒத்தி வைக்கப்பட்டது!

செஸ்மன் எழுதிய மூன்று நூல்களில், "மரணவரிசை" என்ற நூல் உலகப் புகழ்பெற்றதாகும்! இந்த நூலின் மூலம் செஸ்மனுக்குலட்சக்கணக்கில் வருமானம் கிடைத்தது. அதற்காக வருமான வரி கட்டவேண்டுமென்று அரசாங்கத்தினர் செஸ்மன்மீது ஒரு வழக்கும் தொடர்ந்துவிட்டனர்! தன்னால் வருமான வரி கட்டமுடியாது என்று செஸ்மன் வாதாடினான். இறுதியில் அவனுக்குத்தான் வெற்றி! வருமான விரி விஷயத்தில் செஸ்மனால் வெற்றியடைய முடிந்தாலும் மரணதண்டனையைப் பொறுத்தமட்டில் அவனால் ஒன்றுமே செய்யமுடியவில்லை!

* * *

1960-ம் ஆண்டு!

மே மாதம், ௨-ம் திகதி!

முற்பகல் மணி எட்டு!

ஸென் குயின்டின் சிறைச்சாலைக்கு முன்னால், மனிதவெள்ளம் கரைபுரண்டு கொண்டிருந்தது! அவர்களின் கைகளில் 'செஸ்மனைத் தூக்காதே!'; 'தூக்குத் தண்டனை ஒழியவேண்டும்!'; 'பன்னிரண்டு வருடங்கள் வருந்தியதுபோதும்' என்று எழுதப்பட்ட அட்டைகள் காட்சியளித்தன.

ஆமாம், அன்று தான் செஸ்மனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படும் நாள்! சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் செஸ்மனின் உயிர் இவ்வுலகிலிருந்து பிரியாவிடை பெற்றுவிடும், செஸ்மன், தனது இறுதி நேரத்தில் உலக மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் இதுதான்—

**"மரண தண்டனை ஒழிய வேண்டும்!"**

கடைசிநேரத்தில் செஸ்மனுடன் உரையாடுவதற்குப் பத்திரிகை நிருபர்களைத்தவிர, 'பெரும் புள்ளிகள்' மட்டுமே அனுமதிக்கப் பட்டனர். இன்று உலகில் சிறந்த நடிகராகக் கருதப்படும் மார்லின் பிராண்டோ, செஸ்மனின் வாழ்க்கையைத் தாம் திரைப்படமாக்கப் போவதாகக் கடைசிநேரத்தில் செஸ்மனிடம் நேரடியாகச் சென்று உறுதியளித்தார்! மற்றும் பிரபல நடிகைகளாகிய பிரிகிட்டிபார்டட், எலிஸபெத் டைலர் ஆகியோர் கடைசிநேரத்தில் செஸ்மனுக்கு ஆறுதல் கூறுவதற்காகச் சென்றிருந்தனர்:

நேரம்-காலை 8-30 மணி!

செஸ்மனின் மரணதண்டனையை ஒத்திவைக்குமாறு கலிபோர்ணிய கவர்ணர், சிறைச்சாலை அதிகாரிக்கு போன் செய்தார்.

ஆனால்—

'விதி' சதிசெய்தது!

துர் அதிர்ஷ்டவசமாக, ஸென் குயின்டின் சிறைச்சாலையிலுள்ள டெலிபோனில் ஏதோகோளாறு ஏற்பட்டுவிட்டது!

சரியாகஒன்பதுமணிக்கு கரேல் செஸ்மன் நச்சுப் புகை ஊட்டிக் கொல்லப் பட்டான்!

செஸ்மன் சமயச்சடங்குகளில் நம்பிக்கையற்றவன். தனதுசவத்திற்கு எந்த விதமான சமயச் சடங்குகளும்செய்யக்கூடாதுஎன்று இறக்குமுன்னரே அவன் வேண்டிக் கொண்டான். அதன்படியே, அவனது பிரேதத்திற்கு இரண்டு ரோஜாப் பூ அலங்காரத்துடன் விட்டு விட்டனர். மாலை நான்கு மணிவரை அவனுடைய பிரேதம் பொதுமக்கள் பார்வைக்காகவைக்கப்பட்டிருந்தது ஜனங்கள் திரள்திரளாக வந்து, கண்ணீர் மல்க அந்தக் 'கொள்கைவீர'னின் பிரேதத்தைத் தரிசித்துச் சென்றனர்!

(முடிவுற்றது)

## திருவுளம் பொங்கிட......

மேகத் திரளைக் கிழித்துக் கிழக்கினில்
மேவுது தெய்வஒளி—இருள்கெட
மேவுது தெய்வ ஒளி—மனக்
காகம் சிறகை விரித்து அடித்திடக்
காணுது வெட்ட வெளி—தனக்குள்ளே
காணுது வெட்ட வெளி!

தூரத்துப் பார்வையில் ஆழிமுகட்டிலே
தோன்று தொருபடகு—விளிம்பிடைத்
தோன்று தொருபடகு—மனப்
பாறையிலும் இனப் பாசத்தி னல்வரப்
பார்க்கு தொரு குடைவு—எழுந்திடப்
பார்க்கு தொரு குடைவு!

வண்ணப் பருவம் மயங்கச் சிரித்து
மலருது செங்கமலம்—வனப்பில்
மலருது செங்கமலம்—எங்கோ
எண்ணத்திலும் காதல் என்ற முனைப்பினில்
ஏறு தொருசலனம்—நொடிப்புளே
ஏறு தொரு சலனம்!

தென்றல் உலுப்ப உடலம் சிலிர்த்துச்
சிரிக்குது முல்லைமலர்—மயலில்
சிரிக்குது முல்லைமலர்—மனக்
குன்றினிலும் ஒரு பொய்கை யமைத்துக்
குதிக்கு தவள்வதனம் — முகிழ்ந்து
குதிக்கு தவள் வதனம்!

பட்டு மணலில் அலையின் ஒதுக்கிற்
படியு தொரு தரளம் — தவழ்ந்து
படியு தொரு தரளம் — மனச்
சிட்டு மவளின் திருவுளம் பொங்கிடத்
தேடுது செம்பவளம் — சுவைத்திடத்
தேடுது செம்பவளம்!

—"திமிலைத்துமிலன்"

## டெலிவிஷனில் உதைபந்தாட்டம்! தொழிலதிபரின் புதிய திட்டம்!!

ஜெர்மனியிலுள்ள மக்கள் உதை பந்தாட்டப் போட்டியில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். அங்கு ஒருஉதை பந்தாட்டப் போட்டி நடைபெற்றால், பல மைல்களுக்கு அப்பாலிருந்தும் ரசிகர்கள் உதை பந்தாட்டப் போட்டியைப் பார்க்க வருகிறார்கள். குறைந்த பட்சம் இரண்டு லட்சம் பேர்கள் வரை போட்டியைப் பார்ப்பதற்காகக் கூடிவிடுகிறார்களாம்! பாடசாலை மாணவர்களுடன், காரியாலயங்களிலும், தொழிற்கூடங்களிலும் வேலை செய்வோர் யாவரும் லீவுபோட்டுவிட்டு, உதை பந்தாட்டப்போட்டியைக் காணவந்து விடுகிறார்கள். இதனால் பெரும் பெரும் தொழிற்சாலைகளிலும் கூட வேலைகள் தடைபட்டுவிடுகின்றன.

இந்தச் சங்கடத்தைச் சமாளிப்பதற்காக, ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலையொன்றின் முதலாளி ஒருவர் ஒரு புதுமாதிரியான யுக்தியைக் கையாண்டு, வெற்றி பெற்றுள்ளார்.

தம் தொழிற்கூடத்தில் ஒரு 'டெலிவிஷன்' கருவியை வைத்து, தமதுதொழிலாளர்களுக்கு அந்த டெலிவிஷனின் மூலமாகவே உதை பந்தாட்டப் போட்டியைக் காட்டி வருகிறார். "இந்த வழியை நான் கையாளுவதால் எனது தொழிற்சாலையின் உற்பத்திஅதிகம் தடைபட்டுப் போவதில்லை" என்று அந்த முதலாளி கூறுகிறார்!

# "காதல்னு எனக்கு ஒண்ணுமே தெரியாது!"

## குமாரி 'சச்சு' கூறுகிறர்!

தற்காலத்தில், 'வயது வந்த' பெண்களுக்குக் காதலைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கத்தேவையில்லை. ஆனல், குமாரி சச்சு (சரஸ்வதி) காதலைப் பற்றித் தனக்கு ஒன்றுமேதெரியாது என்று கையை விரிக்கிறர்!

இவர் பேபி சச்சுவாக இருந்தகாலத்தில், டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்களில் பங்குபற்றிக் கொண்டிருந்தார். சில ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு வந்திருந்த (பேபி) சச்சு, இலங்கைவானெலியின் 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியில் கூடப் பங்குபற்றினர். அப்போது அவர் 'வயது வராத' சிறு பெண். இன்று அவர் 'வயதுவந்த' வாலைக் குமரி! இப்பொழுது ஏ. வி எம். படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் இவருக்கு 'காதல்' என்றல் என்னவென்று ஒன்றுமே தெரியாதாம்! இதைப்பற்றி அவரே கூறுகிறர்:

### உணர்ச்சிகள்!


"எனக்கு இப்பத்தான் பதினைந்து வயசாகிறது. நான் எங்க வீட்டிலே, ஒரு ஆண் பிள்ளை மாதிரியே வளர்ந்துட்டேன். இப்படியே சுதந்திரமா வளர்ந்துட்டதினலே, மற்றப்படி வேறே உணர்ச்சிகள் எதுவுமேவரமாட்டேங்கிறது!

### காதல்!

"இந்தக் காலத்திலே எல்லோரும் காதல், கீதல், அது, இதுன்னு என்னவெல்லாமோ சொல்லுறங்க. ஆனல் அதைப்பற்றியெல்லாம் எனக்கு என்னவோ, ஒண்ணுமே தெரியல்லே!"

இவ்வாறு குமாரி சச்சு கூறினர்!

## எதற்கு ஒப்பந்தமோ?



இந்த இளம் ஜோடி, எதற்கோ ஒப்பந்தம் செய்து கொள்வதைப்போல் தோன்றுகிறதல்லவா?...முக்தா பிலிம்ஸாரின் 'பனித்திரை'யில் ஜெமினி கணேசனும், சரோஜாதேவியும்.

# "சினிமாவில் ஒழுக்கத்திற்கு மதிப்பில்லை!" —ராஜஸ்ரீ

"திரைப்பட உலகில் பெண்களின் ஒழுக்கத்திற்கு மதிப்பே இல்லை" என்று திரைப்படநடிகை ராஜஸ்ரீ கூறியுள்ளார்.

### மதிப்பில்லை!

"எனக்குக் கலையுலகம் பிடிக்கவில்லை. குறிப்பாக திரையுலகம் வெறுக்கின்றது. ஏனென்றல் அங்கே நாணயத்துக்கும், நன்னடத்தைக்கும் மதிப்பில்லை. 'குடும்பப் பெண்கள் சினிமாவில் ஈடுபடுவது தவறல்ல' என்று எல்லாரும் பேசுகிறர்கள், எழுதுகிறர்கள் அது சுத்தப் பொய். அந்த வார்த்தைக்கு அங்கே இடமேயில்லை.

### வேண்டுகோள்!

"நன்னடத்தையை விரும்புகின்றபெண்கள், இதயமுள்ள பெண்கள்-யாராக இருந்தாலும் சினிமாவை விரும்பாமல் இருப்பதே சிறந்தது. இதுதான் என் பணிவான வேண்டுகோள்"

இவ்வாறு நடிகைராஜஸ்ரீ கருத்துக்கள்தெரிவித்துள்ளார். — பி. வி. கிரி.

## 'பாடும் பறவை'யில் ஒரு மாற்றம்!

கண்ணதாசனின் நான்காவது தயாரிப்பான 'பாடும் பறவை' என்ற படத் துவக்க விழா அண்மையில் நடந்ததையும், வழக்கறிஞர் வி. பி. இராமன் எழுதிய கதைக்கு, வசனம் பாடல்களைக் கண்ணதாசனே எழுதுவதாகவும், டைரக்ஷன் பொறுப்பையும் கண்ணதாசனே ஏற்றிருப்பதாகவும் முன்பு ஒரு முறை 'புதின'த்தில் செய்தி வெளியாகி யிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

ஆனல், இப்பொழுது கண்ணதாசன் வசனம், பாடல்களைமட்டுமே எழுதுவதாகவும், அவரே டைரக்ட் செய்யவிருந்த உத்தேசத்தைக் கைவிட்டு விட்டதாகவும் செய்தி கிடைத்துள்ளது. ஸ்ரீதரே இப்படத்தை டைரக்ட் செய்யவிருக்கிறராம்!

கண்ணதாசனின் சொந்தக் கம்பெனியான விசாலாட்சி பிலிம்சார் தயாரித்துவரும் 'பாடும்பறவை'யில் எம். ஆர். ராதா, கல்யாண் குமார், சந்திரபாபு, தேவிகா ஆகியோர் நடித்துவருகின்றனர்.

## நாடோடிக் காதலனில் நடிகர் ரஞ்சன்!

ஸ்வர்ண மூவிஸ் என்ற புதிய படக் கம்பனி 'நாடோடிக் காதலன்' என்ற பெயரில் ஒரு படத்தை தயாரிக்க இருக்கிறர்கள். இப்படத்தில் ரஞ்சன் பிரதம பாகத்தில் நடிப்பார். யோகானந்த் டைரக்ட் செய்வார்.

## அறுபது வயதுக் கதாநாயகன்!

பிரபல படத்தயாரிப்பாளரும், டைரக்டருமான வி. சாந்தாராம் அண்மையில் தமது 60-வது பிறந்த தினத்தைக் கொண்டாடினர்! 'இந்த' வயதிலும் அவர், அவரது சொந்தப் படமான 'ஸ்திரீ' என்ற படத்தில் கதாநாயகனக நடித்திருக்கிறர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிகிட்டி பார்டட்டுக்கு பொலீஸ் காவல்!

பிரபல ஹாலிவுட் நடிகையான பிரிகிட்டி பார்டட்டைபயமுறுத்திப்பணம் பறிக்கும் கோஷ்டி ஒன்று, பயமுறுத்திப் பணம் கேட்டு எச்சரிக்கை செய்துள்ளது. இதன் காரணமாகப் பாரிஸிலுள்ள அவரது வீட்டைச் சுற்றி பொலீஸ் பந்தோபஸ்து அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரிப் பயமுறுத்திப் பணம் பறிக்கும் திருட்டுக் கூட்டத்தை பிடிக்கும் முயற்சியில்பொலீசார் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

## நடிகை ராகினிக்கு நடிகர் அஜீத் ஜோடி!

கவிதா பிலிம்சார் தயாரிக்கவிருக்கும் 'சிந்துபாத்' என்ற ஹிந்திப் படத்தில் வடநாட்டு நடிகர் அஜீத்தும் தென்நாட்டு நடிகை ராகினியும் ஜோடியாக நடிக்க இருக்கின்றனர். இப் படத்தின் இசைப் பொறுப்பை லட்சுமிகாந்த், பியாரேலால் ஆகிய இருவரும் ஏற்க இருக்கின்றனர். டைரக்ஷன் பொறுப்பை பாபுபாய் மிஸ்திரி ஏற்றுள்ளார்.

## ஸ்ரீதரின் 'எது வாழ்வு?'

சித்ரகலா பிக்சர்சாரின் 'எது வாழ்வு' என்ற படம் உருவாகவிருக்கிறது. டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகமாக நடத்திய கதைதான் 'எதுவாழ்வு' என்பது. வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஸ்ரீதரே ஏற்பார்.

சித்ரகலாபிக்சர்சார் இப்பொழுது தேன் நிலவை தெலுங்கில் டப் செய்து வருகிறர்கள்.

## அனுதைகள்!

எம். எம். புரொடஷக்ன்சாரின் 'அனுதைகள்' என்ற படம் விரைவில் உருவாகவிருக்கிறது. இந்தப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி இணையாக நடிக்கிறர்கள். ப. நீலகண்டன் டைரக்ட் செய்கிறர்.

## கதாசிரியை ஜி. வரலட்சுமி!

### அவர் கணவன் கதாநாயகன்!!

பிரபல தென்னிந்திய திரைப்பட நடிகையான ஜி. வரலட்சுமி, மல்யுத்த வீரர் அஜித்சிங்கை மணந்துகொண்டது வாசகர்களுக்குத் தெரிந்ததே. நடிகை வரலட்சுமி ஒரு படத்தை சொந்தத்தில் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார், இந்தப் படத்திற்கான கதையை அவரே எழுதியிருப்பதுடன், அவரே அந்தப்படத்தை டைரக்ட் செய்யவும் போகிறராம்!

தெலுங்கில் தயாராகும் இந்தப் படத்தில், வரலட்சுமியின் கணவரும், குத்துச் சண்டை வீரருமான அஜீத்சிங் கதாநாயகனகவும், ஜி. வரலட்சுமி கதாநாயகியாகவும் நடிக்கவிருக்கிறர்களாம்.

## ஆவா கார்டினரின் காவலனுக்கு அபராதம்!

பிரபல ஹாலிவுட் நடிகையான ஆவா கார்ட்டினர் தனது தற்காப்புக்காக ஒரு நபரை வேலைக்கு வைத்திருக்கிறர். ஐம்பத்தைந்து வயதான வில்லியம் கல்லாகெர் என்ற அந்த நபர், தனது எஜமானியான நடிகையைப் பார்க்க வந்த நபரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார். ஆனல், துரதிர்ஷ்ட வசமாக அந்த மனிதர் ஒரு நீதிபதியாக இருந்ததால் அந்தக் காவலர், மாட்ரிட் நீதிமன்றத்தினல் ஏழு பவுண் அபராதம் விதிக்கப்பட்டார்! ஒரு கலாச்சாரப் படம் தயாரிப்பது சம்பந்தமாக ஆவா கார்டினருடன் கலந்துபேசுவதற்காகவே அந்த நீதிபதி அங்கே வந்தாராம்.

உங்கள் கருத்து என்ன?

# காதல் முறிந்தால் துறவா?

பி. எஸ். ஸி பட்டதாரியான ஒரு தமிழ்ப் பெண் தன் சொந்த மைத்துனரைக் காதலித்தாள். ஆனுல், மைத்துனரோ அவளை விட்டு, மாற்ருள் ஒருத்திக்கு மாலையிடத் துணிந்தார் முடிவில் பட்டதாரிப் பெண் உலகவாழ்வை வெறுத்துக் கன்னியாஸ்திரி மடத்தில் சேர்ந்துவிட்டாள்! இது அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். இதைப்பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து, எண்ணற்ற வாசகர்கள் எழுதியிருந்தனர், அவற்றில் சில இதோ—

பட்டதாரிப்பெண்ணைப் போற்றுகின்றேன். அவள் மைத்துனரைத் தூற்றுகின்றேன். இன்றையஉலகில் சில ஆண்கள் காதல்கொள்வது என்பதை ஒருவிளையாட்டாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர்!

அந்தப் பட்டதாரிப் பெண் நினைத்திருந்தால் வேறு ஒரு இளைஞரை மணந்திருக்கலாம். ஆனுல் அவள் கொண்டிருந்தது தெய்வீககாதல் உள்ளம், உடல் யாவற்றையும் மைத்துனருக்காகவே அர்ப்பணித்திருந்தாள். மைத்துனர் அவளைக் கைவிட்டதும் அவள் சொல்லமுடியாதமனக் கஷ்டம் அனுபவித்திருப்பாள்! மைத்துனருக்குமாத்திரம் இடமளித்த அதே உள்ளத்தில் மாற்ருனுக்கு இடமளிக்க விரும்பவில்லை அவள். அதே நேரத்தில் தன் அருமை மைத்துனரின் நல்வாழ்க்கையையும் அவள் விரும்பினுள். மைத்துனருக்குச் செய்யமுடியாத சேவையைக் கடவுளுக்கும், சமூகத்திற்கும் செய்வதற்காகவே அவள் கன்னியாஸ்திரி மடத்தில் இருந்தாள். இதுவே பட்டதாரிப் பெண்ணின் புனிதமான முடிவு!

— புஸ்பம் இரத்தினதுரை
9, சென் லூஷியாஸ் லேன்,
கொட்டாஞ்சேனை.

"காதல்... காதல்... காதல்
காதல்போயிற் காதல்போயிற்,
சாதல் சாதல் சாதல்..."

புதுமைக்கவி பாரதியாரே இப்படிப் பாடியிருக்கின்ருர்! தான் நினைத்திருந்தால் அவள் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம். அவள் அப்படிச் செய்து கொண்டிருந்தால், தன் மைத்துனரைஉலகம் தூற்றுமே என்று அவள் அஞ்சியிருக்கக்கூடும். அதுவுமல்லாமல், தற்கொலை செய்வது கோழைத்தனம் என்பதையும் பட்டதாரியான அவள் உணர்ந்திருக்கவும் கூடும். எனவேதான் உலகத்துக்குச் 'செத்தவளாக' கன்னையர் மடத்தில் சேர்ந்து கவலையை மறக்களண்ணியிருக்கிருள் அவள். அவள் செய்த முடிவு சரியே.

— ஆர். கணேஷ்
கட்டுகாஸ்தோட்டை வீதி,
கண்டி.

ஆம், அதுவே நல்லமுடிவு. எவரைத்தான் இதயபீடத்தில் இருத்தி மனப்பூர்வமாக நேசித்தாளோ, அவர் தன்னை ஊதாசினப்படுத்தி வேருெருத்தியைத் தன்வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக் கொண்டாலும், தன் இதயத்தில் அடுத்தவரை இருத்தி வாழ விரும்பாதவள் தங்கள் எண்ணம் கைகூடவில்லை என்றவுடன் தற்கொலை புரிந்து கொள்ளும் கோழைகளைப்போல் இல்லாது, வாழ்க்கை தனக்குப் பயன்படாதுபோனுலும் மற்றையோருக்குபயன்படட்டும் என்னும் பொதுநோக்குடன் கன்னியாஸ்திரிமடத்தில் சேர்ந்துபொதுத்தொண்டுசெய்யவிரும்பினுள். வரவேற்கத்தக்க விடயம்.

— சு. தேவதாஸ்
நெடுந்தீவு.

மனித வாழ்க்கை கொந்தளிக்கும் அலைகடலாக இருக்கிறது. இங்கே உணர்ச்சி அலைகள் மனம் என்னும் கரையை அடிக்கடி முட்டி மோதி சிதறுகின்றன. ஒரு கடற்கரையில் நின்று கடலைப்பார்க்கும் பெரியவர் அதன் அலைகள் தொலைவில் பொங்கிச் சீறி எழுந்துவந்தாலும் கரையை அடையும்பொழுது அமைதியாக—ஆற்றல் குறைவாக—வந்துசேரும் என்ற உண்மையை உணர்வார். ஆனுல் ஒருசிறுவனே அந்த அலைகளின் வேகத்தைக் கண்டுவியந்து; அதேவேகத்தில்—அதே ஆற்றலுடன்—அந்த அலைகள் கரையை அடையும் என்று நம்புவான். இந்தநம்பிக்கை சீர்குலையும் போது கடலின் அலைகளை வெறுப்பதா? இயற்கை அலையின் எளில்மிக்க தோற்றங்களைத் துறக்க முற்படுவதா? வாழ்க்கையே அழிந்துவிட்டது என்று புலம்புவதா? இதை ஒரு வகை அறியாமை என்றே கூறவேண்டும். ஆகவே காதலிலே தோல்வியடைந்தவர் வாழ்க்கையைத் துறக்க முற்படுவது போற்றத்தக்கதல்ல.

— நெல்லியான் செல்வம்
சுழிபுரம்.

படித்த பெண், தான்காதலித்தவரை அடையாவிடில் துறவு பூண்டு மடத்தில் போய் இருக்கவேண்டியதில்லை. தான்காதலித்தவன் இன்னெரு பெண்ணை மணக்க, பெண்களும் ஏன்வேறு ஓர் ஆடவனைத் திருமணம் செய்து வாழக்கூடாது? படித்தும் கண்டபலன் பார்த்தோருக்கு பரிகசிக்க நடப்பதல்ல! ஆண்களுக்குஎடுத்துக்காட்டாக, வாழவேண்டிய பெண்கள், ஏன் வீணுகத் துறவு பூண வேண்டும்? கேவலம் இதனுல் எத்தனை பெண்கள் வாழ்வை இழக்கவேண்டும். ஆதலால் நான் வேறு ஓர் ஆடவனை மணந்து வாழ்வதையே விரும்புவேன்.

—மகேஸ்வரி சோமசுந்தரம்
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

## பொங்கல் அடுவீரே!

பொன்கை வடங்கள் 'கிணிங் கிணிங்' என்று
புரண்டு புரண்டாட—இரு
கொங்கை புதைந்து கிளர்ந்த நினைவுகள்
கூத்திடு பண்பாட—முகத்
'திங்கள்' கரும்புகைத் தேக்கத்தில் மூழ்கித்
திரள் வியர் நீராட—இளந்
தங்கையரே, தமிழ் மங்கையரே! தைப்
பொங்கல் அடுவீரே ...

உள்ளூறு பல்வகை 'எண்ணம்' உறுத்தி
உடற்புறம் மல்லாடத்—துவம்
மெல்லிடை 'வல்லி' குழைந்து வளைந்திட
மேற்புறம் தள்ளாடக்—கொடி
மல்லிகை முல்லை மயக்கிடு வெண்ணகை
மாணிதழ் உள்ளாட—அகிற்
கொள்ளியை மூட்டியிக் கோதறு நாளின் தைப்
பொங்கல் அடுவீரே......

வட்டமுகம் புகைபட்ட வியர்த்துளி
வட்டிலில் வார்ந்தோட—பிடி
இட்ட கரண்டியாற் கொட்டு நறும்புனல்
முட்டு நுரையாட—மடி
முட்டி வளிந்து கறந்த வெண்பாலலை
கொட்டு மொலியாட—நம்
கெட்ட குணங்க ளவிந்திடு தீயிற்பண்
பட்ட பொங்கல் அடுவீர்!

சந்தன வாடை சருக்கரை வாடை நற்
சாறு கனிவாடை—முதிர்
செந்தூர பஞ்சளோ டிஞ்சி பொரிஞ்சு
கரைஞ்சே எழுவாடை—"தன
தந்தனத் தான தனுதனதா" வெனுந்
தாளத் தமிழ் வாடை—உலைப்
பந்தெனப் பட்டெழுந் தார்த்திட வார்த்தபாற்
பொங்கல் அடுவீரே!

மாரி பொழிந்து நம் வாரி மலர்ந்துழும்
ஏரில் விளைந்தவெலாம்—மொழிச்
சீரிலுயர்ந்த செழுந்தமிழ் ஊர்த்திரு
நாளில் அடுவீரே—பெருந்
தாரிலலர்ந்து மணங்கமழ் காந்தளாங்
கைவிது வண்ணமெலாம்—உயர்.
நாரியரே! திரு நாளில் மணந்திடப்
பொங்கல் அடுவீரே!

— "இராஜபாரதி"

# இவரே எங்கள்
## (ஸ்கந்தவரோதயக்கல்லூரி)
# அதிபர்!

எமது அதிபர் சிலவேளைகளில் தாம் இருக்குமிடத்தையும், செய்த சாதனைகளையும், தமது எதிர்கால ஆசைகளையும் பாடசாலை சம்பந்தமாகப் பெருமையுடன் கூறி இன்புறுவதுண்டு.

முதலில் அவர் சிறந்த பட்டதாரியும், சாதுரியமும், பேச்சு வன்மையும் மிக்கவர். பேச்சுத் துறையில் 'பேச்சு நிபுணர்' என்ற (Orater) என்ற பட்டப் பெயரைப் பெற்றவர். எளிமையாகவும், ஹாஸ்யமாகவும் மணிமணியாய்ப் பேசி இளம் உள்ளங்களில் உண்மையை இலகுவில் புகுத்திவிடும் திறமையுள்ளவர்.

எமது பாடசாலை ஒரு கிராமப்புறப் பாடசாலையாக இருந்தும், அவரது சேவையானது யாழ்ப்பாணத்திலே ஒரு பிரபலமான பாடசாலையாகவும் 1-ம் தரப் பாடசாலையாகவும் ஆக்கிவைத்துள்ளது. உண்மையில் திறமை படைத்த நிர்வாகிதான். திறமையும் நேர்மையும் உடையோரையே பாடசாலை ஊழியராக அங்கீகரித்துள்ளார்.

மாணவர்களை நடத்தும் முறையில் ''எந்த நேரத்திலும் எவருக்கும் அன்பு அகிம்சை காட்டவேண்டும்'' என்ற காந்திஜியின் கொள்கையையன்றி ''வேண்டிய இடத்தில் பலாத்காரமும் செலுத்த வேண்டும்'' என்ற லெனின், நேதாஜியினுடைய அடிச் சுவட்டில் நிற்பவர் ஆனுல் மாணவருக்கு எந்த நேரத்திலும் அன்பு காட்டினுல் நிலைமை எப்படி இருக்குமென்று கூறவேண்டுமா.

அவரிடம் காணப்படும் ஒரு குறைபாடு யாதெனில் மாணவருக்கு அன்பு காட்டுவதுடன் எந்த விஷயத்திலும் மாணவர் பக்கம் நிர்பதில் அவர் தவறியதில்லை. மாணவரிடமிருந்து வசதிக் கட்டணம் பெறுவதற்காக அடிப்பதும், பயமுறுத்தல் செய்வதுமுண்டு எனினும் மாணவருக்கு வேண்டிய சலுகைகள், பாதுகாப்புகள் அளிக்க அவர் என்றுமே தயங்கியதில்லை இது ஒரு அதிபருக்கு வேண்டிய தந்திரம்தானே?

எமது அதிபர் வேறு அதிபர்களை விட சிறந்தவராகக் கருதப்படும் தன்மை யாதெனில் அவர்மாணவருடன் நெருங்கிப் பழகி அன்பு காட்டுவதுடன், மக்கள் மத்தியிலும் அளப்பரிய சேவைகளைச் செய்து பெரிய செல்வாக்கைப் பெற்றவர்!

வருடாவருடம் பல வைத்தியர்களையும், எஞ்சினியர்களையும், கலைஞர்களையும் உருவாக்கி சமூகத்துக்காக உழைக்கும்படி விட்டுள்ள அதிபருக்கு மாணவருலகம் செய்யும் பிரதியுபகாரம்தானென்ன. தமது சிறிய நன்றியை மாத்திரம் தெரிவித்துக்கொள்ள முடியும். எனவே எமது அதிபர் பதவி துறந்த பின்பும்கூட சமுதாயத்தில் அவருக்கு ஒரு பெரிய சிறந்த ஸ்தானம். அவரது வருகையைக் காத்துநிற்கும் என்பதில் ஐயமில்லை.

— நா. தில்லைநாதன்,
சங்கானை

# இத்தால்... சகலரும் அறிவது!

### பணத்துக்கு அரோகரா!

வேலணையிலுள்ள ஒரு மரணசகாய நிதிச் சங்கத்தில் பணம் கட்டி ஏமாந்து போனவர்கள் பல பேர்கள்.

அங்கத்தவர் பணம் கேட்கும் பொழுதெல்லாம் வேடிக்கைக் கதைகள் சொல்லியும், தலைமறைவாய்த் திரிந்தும் பாமர மக்களை ஏமாற்றி வருகிறார்களாம், சங்கத்தைச் சேர்ந்த உத்தியோக மோகம் பிடித்த பச்சோந்திகள்!

வேலணை கிழக்கு. — ஐ. பாலசுப்பிரமணியம்.

### இன்னும் வாய்ப்புவேண்டும்!

தங்கள் 'புதினம்' பத்திரிகையில் மாணவர்களும் பங்குபெற்றக் கூடிய வாய்ப்பை "இவரே எங்கள் அதிபர்" என்றபகுதியின் மூலம் அளித்தமை இட்டு மகிழ்சி அடைகின்றோம். இதுபோன்ற இன்னும் பல வாய்ப்புகள் அளிப்பீர்கள் என்று எதிர் பார்க்கின்றோம்.

நிந்தாவூர்-3. — எம். எஸ். எம். மீராசாய்பு.

### தள்ளாட்டம் ஒழியட்டும்!

இப்பொழுது எங்கள் பிரயாண வசதிக்காக விடப்பட்டுள்ள மோட்டார்ப்படகில் 40 பிரயாணிகள் மாத்திரம் பிரயாணம் செய்யலாம். நெடுந்தீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு ஒருநாளில் ஒருமுறைதான் சேவை செய்கின்றது. 40 பிரயாணிகட்கு அதிகமாகப் பிரயாணிகள் கூடிவிட்டால் பிற்பகல் ஒரு மணிக்குச் செல்லவேண்டியபடகு மாலை 5 மணிவரை காத்து நின்று விடுகின்றது. இந்தத் தருணத்தில் படகுத்தொழிலாளிகள் மதுவருந்தியநிலையில் தடுமாறித் தவிப்பதுவும் மிகவும் துக்கத்துக்குரியதாகும் இவைகளைச் சீர்செய்து எங்களின் பிரயாண வசதியை விருத்தி செய்யும்படி இதன் பொறுப்பாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நெடுந்தீவு. — செ. மகேந்திரன்.

### சுதர்ஷனின் தவறு!

நடந்தவாரம் புதினத்தில், சுதர்ஷன் எழுதிய "தவறு!" என்ற கதை பிரமாதம்! 'ரமணன்' எழுதும் கறேல் செஸ்மன் கதை இத்தனை சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்று கனவிலும் நினைக்கவில்லையே!

சுண்டிக்குளி. — வ. சிவா.

### கூடுவிட்டுக் கூடுபாயும்......

திருமலைத் தமிழர்கள் தமிழ்மொழியின் மேல்கொண்டுள்ள ஆர்வம் யாவரும் அறிந்ததே. ஆனால் நகராண்மைக் கழகத் தேர்தல்களில் "மொழியைக்காக்க விழியைக் கொடுப்போம்" எனச்சில அதந்திரா அரசியல்வாதிகள் கூச்சுரலிட்டு,பின் பனரமுகமாக மாறுவதைச் சண்குளிரக் காண்கிறார்கள் திருமலைத் தமிழர்கள். அவர்களில் முதன்மை பெற்று விளங்கும் வீரர், நகராண்மைக்கழகத் தலைவர் டாக்டர். சிவானந்தமேயாகும். நகராண்மைக்கழகத் தலைவராக வருவதற்கு, இறந்த தமிழரசுப்பிரதிநிதி திரு ஏகாம்பரம் ஆவியை வணங்கியவர் டாக்டர். சிவானந்தம் அவர்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் செனட்டராக வருவதற்கு, அவர் செய்த பகீரதப் பிரயத்தனங்கள் எண்ணிக்கையிலடங்கா.

கல்விமந்திரி பதியுதீன் மஹ்மூத் திருமலைக்குவருகை தந்தபொழுது அன்னாருக்கு அல்ஹாஜ் எஸ் எம். ஏ. அஸீஸ் வீட்டில் விருந்து நடைபெற்றது. அவ்வமயம். எமது டாக்டர். சிவானந்தம் பேசுகையில் 'என் எண்ணமும் மந்திரியின் எண்ணமும் ஒரே நோக்கில் போகின்றது" எனக்கூறியது மட்டுமல்ல, எஸ். எல் எஸ். பி. மந்திரிகளை திருமலைவரவேற்கும் நாள் வெகு தூரத்திலில்லை' எனக்கூறினர்.

திருமலை. — எஸ். கே. நாதர்.

### புதினப் பொங்கல்!

பொங்கற் திருநாளில் புத்தாடை பூண்டு தமிழ்
பொங்க வெனவாழ்த்திப் போற்றுங்கள்—எங்கும்
சிங்கார மாகப் புதினத்தாள் சுற்றிவரப்
பொங்குக! புதியபாற்பொங்கல்!

யாழ்ப்பாணம். — மா. சிவதாசன்.

# நெருப்பு அபாயம் நிறைந்த யாழ்ப்பாணம்!

## இங்கே தீயணைக்கும் படை இல்லை!

மானிப்பாயில் சுதுமலையைச் சேர்ந்த திரு. எஸ். பொன்னம்பலம் என்பவரின் வீடு திடீரென்று தீப்பற்றிக்கொண்டதன் காரணமாக வீட்டின் அரைவாசிப்பகுதி எரிந்து சாம்பலானது! வீட்டின் பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் மயிர் கொட்டிப் புழு பற்றியிருந்ததாம். அந்தப் புழுவைச் சுட்டு அழிக்கும் நோக்கத்துடன் ஈடுபட்டிருந்தபொழுது எதிர்பாராதவிதமாக வீட்டின் கூரையில் தீப்பற்றிக்கொண்டதாம்.

சுற்றுப் புறங்களில் குடியிருந்த மக்கள் மிகுந்தபிரயாசைப் பட்டு, நெருப்புடன் போராடி வீட்டின் பாதிப் பகுதியை நெருப்பிலிருந்து காப்பாற்றினர். ஸ்தலத்திலிருந்து இந்தக் காட்சியைக் கண்ணால் கண்ட ஒருவர் இதுபற்றிப் 'புதினம்' நிருபரிடம் பின்வருமாறு குறிப்பிட்டார் "இலங்கையில் கொழும்பு, கண்டி போன்ற முக்கிய நகரங்களில் நெருப்பணைக்கும் படையினர் சேவைசெய்து வருகின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் நெருப்பணைக்கும் படையினர் இல்லாமலிருப்பது நமது துர் அதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால், நமது கவனக்குறைவேதான் முக்கிய காரணம்!

யாழ் நகரிலும், அதன் சுற்றுப் புறக் கிராமங்களிலும் பனையோலையால் வேயப்பட்ட குடிசைகள் ஏராளமாக இருக்கின்றன. பெரிய கல்வீடாக இருந்தாலும்கூட அதன் சுற்றுப் புறங்களில் பாதுகாப்பிற்காக ஓலைவேலி அமைக்கப்பட்டே இருக்கின்றன. இந்த ஓலை வேலி வீட்டைத் தற்காலிகமாகப் பாதுகாக்கின்றது. என்றாலும், ஓலையில் எளிதில் நெருப்புப்பற்றிக்கொள்ளும்! இப்படி எதிர்பாராத விதமாக நெருப்புப்பற்றிக்கொள்வதால் முழு வீடும் எரிந்து சாம்பலாகிறது. அடுத்தடுத்த வீடுகளுக்கும் பரவிவிடுகின்றது. இதனால் கணக்கற்ற பொருட்சேதம் மட்டுமல்ல; சிலசமயங்களில் உயிர்ச் சேதங்களும்கூட ஏற்பட்டு விடுகின்றன.

'செருப்புக்காகக் காலைக் குறைக்க முடியாது' என்பது நம் தமிழ்ப் பழமொழி, அதைப் போல், நெருப்புக்குப் பயந்து எல்லோரும் கல்வீடு கட்டுவது என்பது முடியாத காரியம்! அவரவர்கள் நிலைக்குத்தகுந்தபடிதான் வீடுகளையும் கட்டிக் கொள்ளமுடியும். ஆனால், 'ஐயோ பாவம், இவன் ஓலை வீடு கட்டியிருககிறானே' என்று எண்ணி, நெருப்பும் பற்றிக் கொள்ளாமல் விடாது! எனவே. நமது அத்தியாவசிய தேவையை உணர்ந்து—காலத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நம் யாழ்ப்பாண நகரிலும் நெருப்பணைக்கும் படையினரை நியமிக்கவேண்டும்.

யாழ்ப்பாண நகரமக்கள் பல்லாண்டுகளாகத் தீயினால் அனுபவித்து வரும் துன்பத்தைப் போக்குவதற்கு, யாழ்நகர சபையினர் முயற்சி செய்யவேண்டியது முதற் கடமையாகும்!" என்று கூறினர்.


**சோதிடம**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



**சேலம்**

S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்

**வீரிய விர்த்தி மாத்திரை**

மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும் அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.

**24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00**

**லேபனம் மெழுகு**

குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல் தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற்பூசும் மெழுகு.

**1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00**

**தேவைக்கு எழுதவும்:**

**கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்**

*Prop:* S. M R. M S

ராகலை பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)


## 'தங்கத்தில்...மூத்தது "தை" த்திங்கள்'

காட்டிற்கு மூத்தது! கான் நிலவு—கிளப்
பாட்டிக்கு மூத்தது பழம்பானை....
வீட்டிற்கு மூத்தது ஒளிவிளக்கு—பூ;
நாட்டிற்கு மூத்தது 'தை' த்திங்கள்.

ஆடைக்கு மூத்தது கைத்தறியே—காலக்
கோடைக்கு மூத்தது மாரிமழை....
சாடைக்கு மூத்தது கண்துடிப்பு—பூ!
வாடைக்கு மூத்தது 'தை'த் திங்கள்.

பாதைக்கு மூத்தது காட்டுவழி—உளப்
போதைக்கு மூத்தது தாபவெறி...
தோகைக்கு மூத்தது கோல மயில்—ஞாலம்
"பூ"தைக்கு மூத்தது 'தை'த்திங்கள்

கோடிக்கு மூத்தது குமரிவெள்ளை-வெள்ளை
மாட்டிற்கு மூத்தது சதங்கைஒலி....
காடிக்கு மூத்தது வினுகிரியே—மாதம்
ஆடிக்கு மூத்தது 'தை'த் திங்கள்.

வாய்மைக்கு மூத்தது தூய்மை—என்றும்;
சேய்மைக்கு மூத்தது தாய்மை....
ஆண்மைக்கு மூத்தது பெண்மை—அழிவுறு
கேண்மைக்கு மூத்தது 'தை'த்திங்கள்.

இள்வுக்கு மூத்தது களவு—ஞாலத்
தொழிலுக்கு மூத்தது உழவு...
சங்கத்தில் மூத்தது பொங்கல்—மங்கலத்
தங்கத்தில்....மூத்தது "தை"த் திங்கள்.

— நாகூர் ஏ. பாவா.

Registered as a news paper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

'கொன்வென்ற்' பாடசாலையில்

## இந்துப் பிள்ளைகளுக்கு இடமளிக்க மறுப்பு?

ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பொன் 'கொண்வென்ற்' பாடசாலையில், கிறிஸ்தவக் குழந்தைகள் மட்டுமே புதிதாக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்துப்பிள்ளைகளுக்குப் பிரவேசம் மறுக்கப்பட்டு வருகின்றது! இதனை ஆட்சேபித்து இந்துக் குழந்தைகளின் பெற்றோர்கள் உதவிவித்தியாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

பாடசாலையின் சுற்றுப்புறங்களில் வசித்துவரும் இந்துக் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்படுவதைக் கண்டித்து, ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தத் தீர்மானித்திருக்கின்றனர். பிரஸ்தாப 'கொண்வென்ற்' பாடசாலை, இப்பொழுது வித்தியாதிபதியின் மேற்பார்வையின்கீழ் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தீண்டாமையை ஒழிக்க

## இறைபுகழ்வாழியின் உண்ணாவிரதம் தொடர்ந்து நீடிக்கிறது!

ஈழத்திருநாட்டில் தீண்டாமையை ஒழித்துக்கட்டவேண்டும் என்ற நோக்கத்துடன், யாழ்ப்பாணம் கோப்பாயில் திரு. எ. க. சு. இறைபுகழ்வாழி என்பவர் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது வாசகர்கள் அறிந்ததே! இது சம்பந்தமாக அவர் வெளியிட்ட அறிக்கையின் நகல்கள் இலங்கைப்பிரதமமந்திரிஸ்ரீமாவோ, மகாதேசாதிபதி ஒலிவர் குணதிலகா, மந்திரிசபை உறுப்பினர்கள், மற்றும் இலங்கை அரசியல் கட்சித் தலைவர்கள், இங்கிலாந்தின் எலிசபெத்மகாராணி, மற்றும் வெளிநாட்டு அரசியல்வாதிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

கடந்த மாதம் 25-ம் திகதி, கிறிஸ்து பிறந்த தினத்தன்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்த திரு. இறைபுகழ் வாழி, இன்றுவரை உண்ணாவிரதத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

பிரதமரின் செய்தி!

இது சம்பந்தமாக பிரதம மந்திரி காரியாலயத்திலிருந்து திரு. இறைபுகழ்வாழிக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டுள்ளது. அதில், 'தாங்கள் அனுப்பிய கோரிக்கையைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்காகக் கைத்தொழில், உள்நாட்டு கலாச்சார அமைச்சருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதென்று தங்களுக்குத் தெரிவிக்குமாறு, கௌரவ பிரதம மந்திரி எமக்குப் பணித்துள்ளார்" என்று, பிரதம மந்திரியின் காரியதரிசி திரு இறைபுகழ்வாழிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. தஹநாயக்கா அனுதாபம்!

காலித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் மாஜி கல்வி மந்திரியுமான திரு. டபிள்யூ. தஹநாயக்காவும் திரு. இறைபுகழ்வாழிக்கு அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார்

திரு. நவரத்தினம் வாழ்த்து!

கடந்த 1-1-62 அன்று, சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நவரத்தினம் கோப்பாய்க்குச் சென்று திரு. இறைபுகழ்வாழியைச் சந்தித்து, புத்தாண்டுவாழ்த்துக்கூறி, அவருடன் கலந்துரையாடி, ஆறுதல்மொழிகள் கூறிச் சென்றார்.

உறுதி!

திரு. இறைபுகழ்வாழியைப் 'புதினம்' நிருபர் பேட்டி கண்டபோது, 'எனது உண்ணாவிரதத்தின் கோரிக்கை நிறைவேறும்வரையில்—எனது மரண பரியந்தம் உண்ணாவிரதத்தை தொடர்ந்து நடத்தத் தீர்மானித்துள்ளேன். கூடிய சீக்கிரத்தில் எனது கோரிக்கைக்கு ஏற்ற பலன் கிட்டும் என்ற நம்பிக்கை உண்டு!" என்று கூறினார்.

திரு இறைபுகழ்வாழி, கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் கடமையாற்றும் ஒரு ஆசிரியராவார். அவரது கோரிக்கைகளை உடனடியாகக் கவனிக்குமாறும்; உண்ணாவிரதம் தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில், கல்லூரியில் அவரது விடுமுறை நாட்களைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், தீண்டாமை ஒழிப்பியக்கத்தின் செயலாளர் திரு. வே. தம்பிராசா இலங்கைப் பிரதமருக்கும், மந்திரிசபை அங்கத்தவர்களுக்கும் தந்திச் செய்திகளை அனுப்பியுள்ளார்.

உங்கள்

பாடசாலைப் புத்தகங்கள்

கொப்பிகள்

உபகரணங்கள்

நியாயமான விலைகளில்
நம்பிக்கையுடன்
வாங்குவதற்கு:

ஆனந்தா புத்தகசாலை,

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## அதிபரே இல்லாத பாடசாலை! அதே நேரத்தில், ஒரு பாடசாலைக்கு இரு அதிபர்கள்! காரணம் — கல்விஇலாகாவின்சீர்கேடா?

சாவகச்சேரியிலுள்ள பெண்கள் கல்லூரியில், தற்போது அதிபர் ஒருவர் கூட இல்லையாம்! உதவி அதிபர் கூட இன்னும் நியமிக்கப் படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக இவ்வருடம் உயர் வகுப்புக்களுக்கு மாற்றப்பட்ட மாணவர்கள், அடுத்த வகுப்புக்கு இடமாற்றம் செய்யப்படாமலிருக்கிறார்களாம். புதிதாகப் பாடசாலையில் சேரவரும் மாணவர்கள் கல்லூரியில் அனுமதி பெறமுடியாமல் திண்டாடுகிறார்கள்!

இவ்வாண்டு பாடத்திட்டத்திற்கான நேர அட்டவணைகூட இன்னும்தயார் செய்யப்படவில்லை! அரசாங்கக் கல்வி இலாகா இந்தப் பாடசாலைக்கு, அதிபரையோ, உதவி அதிபரையோ இன்னும் நியமனம் செய்யாமலிருக்கும் இந்த நேரத்தில் மற்றொரு பாடசாலையில், இதற்கு எதிர் மாறான நியமனமும்நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது.

நாகொடை மகாவித்தியாலயத்தில் இரண்டு அதிபர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்! கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் திரு. ஏ. எச். எஸ். ஜயரத்தின என்பவர் நாகொடை மகாவித்தியாலயத்தின்அதிபராக நியமிக்கப்பட்டார். இவ்வாண்டு பாடசாலை ஆரம்பித்தவுடன், புதிதாகக்கல்விஇலாகாவினால் நியமனம் செய்யப்பட்ட திரு. சந்திரபாலா என்பவர், தமது பொறுப்பை ஏற்பதற்காக நாகொடை மகாவித்தியாலயத்திற்கு வந்தபொழுது, அங்கே வேறு ஒரு அதிபர் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுக் கடமையாற்றிக் கொண்டிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டாராம்!

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னாலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி; அச்சகம்.